மதுரையில் த.வெ.க. மாநாடு: லட்சக்கணக்கில் திரண்ட தொண்டர்கள்

திருப்பரங்குன்றம், ஆக. 21: மதுரை பாரபத்தியில் வியாழக்கிழமை நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் 2-ஆவது மாநில மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்கள் திரண்டு வந்து பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்னை, வேலூர், திருச்சி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் திரளான தொண்டர்கள் புதன்கிழமை இரவு முதல் மாநாட்டுத் திடலில் குவிந்த வண்ணம் இருந்தனர். வியாழக்கிழமை காலை 10 மணி அளவில் மாநாட்டுப் பந்தலில் அனைத்து இருக்கைகளும் நிரம்பின.

மயங்கி விழுந்த தொண்டர்கள்: கடும் வெயில் காரணமாக, மாநாட்டுத் திடலில் விரிக்கப்பட்டிருந்த தரை விரிப்புகளை எடுத்து கட்சியினர் தற்காலிகக் கூடாரம் அமைத்து வெயிலில் இருந்து தங்களை தற்காத்துக் கொண்டனர். சிலர் நாற்காலிகளை நிழல் குடை போல மாற்றி தலையில் வைத்துப் பிடித்துக் கொண்டனர். ஏராளமான இடங்கள் இருந்தும் பெரும்பாலான பகுதிகளில் நாற்காலிகள் போடப்படவில்லை. கடும் வெயில் காரணமாக 100-க்கும் மேற்பட்டோர் மயக்கமடைந்தனர். அவர்களுக்கு முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டது. நீர்ச்சத்து குறைபாடு ஏற்பட்ட 20-க்கும் மேற்பட்டோர் மதுரை அரசு மருத்துவமனைக்கும், தனியார் மருத்துவமனைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

வெயிலின் தாக்கம் சுமார் 102 டிகிரி அளவுக்கு இருந்ததால், பிற்பகலில் வெயிலின் தாக்கத்தைக் குறைக்க ட்ரோன் மூலம் தொண்டர்கள் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டது. மேலும், அனைவருக்கும் குழாய், புட்டிகள் மூலம் தொடர்ந்து தண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

தொண்டர்கள் அதிக அளவில் குவிந்த நிலையில், தடுப்புகளை உடைத்துக் கொண்டு மற்ற பகுதிகளுக்கு அவர்கள் சென்றனர். தனியார் பாதுகாவலர்கள் தொண்டர்களை கட்டுப்படுத்த முடியாமல் திணறினர். விஜய் நடந்து வந்த நடைமேடை அருகே தடுப்பைத் தாண்டி யாரும் செல்ல முடியாத வகையில், இரும்புத் தடுப்புகளில் கிரீஸ், எண்ணெய் உள்ளிட்டவை தடவப்பட்டன. இதற்கு தொண்டர்கள் தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இதனால், தனியார் பாதுகாவலர்களுக்கும், தொண்டர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

குழந்தைகளுடன் யாரும் வர வேண்டாம் என ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும், பலர் குழந்தைகளுடன் மாநாட்டுக்கு வந்தனர். இவர்கள் பிற்பகலுக்குப் பிறகு மாநாட்டுத் திடலுக்குள் அனுமதிக்கப்படாமல், திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்.

மாநாட்டுக்கு வந்த வாகனங்களை சுமார் 4 கி.மீ. தொலைவுக்கு முன்பாகவே போலீஸார் தடுத்து நிறுத்தியதால், ஏராளமானோர் கடும் வெயிலையும் பொருள்படுத்தாமல் மாநாட்டுத் திடலுக்கு நடந்தே வந்தனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து லட்சக்கணக்கான தொண்டர்கள் குவிந்ததால், மாநாட்டு வளாகத்தைச் சுற்றிலும் கைப்பேசிகளின் சிக்னல் செயல்படவில்லை.

எழுந்து நின்ற பெற்றோர்; அமர வைத்த விஜய்: மாநாடு பிற்பகல் 3.40 மணிக்கு தொடங்கியது. அப்போது, கட்சித் தலைவர் விஜய் தனது சொந்தக் குரலில் பாடிய பாடல் கட்சியின் கொள்கைப் பாடலாக ஒலிபரப்பப்பட்டது. கட்சியின் முக்கிய நிர்வாகிகள், மாவட்டச் செயலர்கள் என 118 பேர் மேடையில் அமர வைக்கப்பட்டிருந்தனர்.

மாநாட்டில் நடிகர் விஜயின் பெற்றோர் எஸ்.ஏ. சந்திரசேகர், ஷோபா இருவரும் பங்கேற்றனர். முன்னதாக, விஜய் மேடைக்கு வந்தவுடன் அங்கிருந்த கட்சியின் முக்கிய நிர்வாகிகள், மாவட்டச் செயலர்கள் அனைவரும் எழுந்து நின்றனர். மேடையில் இருந்த அனைவரையும் பார்த்து விஜய் கைகுலுக்கி வந்த நிலையில், அவரது பெற்றோரும் எழுந்து நிற்க அவர்களைக் கட்டியணைத்து இருக்கையில் அமரச் செய்தார்.

மாநாட்டுத் திடலில் அமைக்கப்பட்ட 100 அடி கொடிக் கம்பம் புதன்கிழமை சாய்ந்து விழுந்தது. இதையடுத்து, மேடையின் அருகே புதிதாக அமைக்கப்பட்ட 40 அடி கம்பத்தில் கட்சியின் கொடியை விஜய் ஏற்றி வைத்தார்.



மதுரை பாரபத்தியில் வியாழக்கிழமை நடைபெற்ற தவெக மாநாட்டில் விஜயின் பேச்சை கேட்க ஒலிபெருக்கி மீது ஏறி நின்ற தொண்டர்கள். (வலது) தொண்டர்களைப் பார்த்து கையசைத்த கட்சியின் தலைவர் விஜய்.

விஜய் சொன்ன குட்டிக் கதை

ஒரு நாட்டின் ராஜா தனக்கு பக்கபலமாகவும், துணையாகவும் இருக்க சரியான தகுதிகளுடன் கூடிய தளபதியைத் தேடி வந்தார். அவர் நினைத்த தகுதிகளுடன் 10 பேர் இருந்தனர். ஆனால், அவர்களில் ஒருவரை மட்டுமே தளபதியாக தேர்வு செய்ய வேண்டும். இதற்காக அவர்கள் 10 பேரிடமும் விதை நெல்லைக் கொடுத்து, மூன்று மாதங்களில் இதை நன்றாக வளர்த்து வாருங்கள் எனக்கூறி அனுப்பி வைத்தார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு வந்த பத்து பேரில் ஒருவர் ஆள் உயரத்துக்கு வளர்ந்த நாற்று, மற்றொருவர் தோள் உயரத்துக்கு வளர்ந்த நாற்று உள்பட 9 பேர் நன்றாக வளர்ந்த நாற்றுகளைக் கொண்டு வந்தனர். ஒருவர் மட்டும் வெறும் தொட்டியுடன் வந்தார். அவரிடம் ராஜா ஏன் எனக் கேட்டார்?. அதற்கு அவர், நானும் நீங்கள் கொடுத்த விதையை நட்டு வைத்து தண்ணீர் ஊற்றியும், உரம் வைத்தும் பார்த்தேன். ஆனால், அது வளரவில்லை எனத் தெரிவித்தார்.

இதைக்கேட்ட ராஜா அவரைக் கட்டியணைத்து இனி நீங்கள்தான் எனது தளபதி என அறிவித்தார். ஏனெனில், அந்த பத்து பேரிடமும் ராஜா கொடுத்தனுப்பியது அவித்த நெல். அவை முளைக்காது. அந்த 9 திருடர்களும் வேறு விதை நெல் வாங்கி ராஜாவையும், மற்றவர்களையும் ஏமாற்றினர்.

ஆனால், ஒருவர் மட்டும் உண்மையைக் கூறினார். இதுபோல ஒரு நாட்டுக்கு திறமை எவ்வளவு முக்கியமோ, அந்தளவுக்கு நேர்மையும், உண்மையும் முக்கியமாகும்.

இப்போது நீங்கள் எல்லோரும்தான் ராஜா. நீங்கள் தேர்ந்தெடுக்கப் போகிற அந்தத் தளபதி என சிறிதுநேரம் பேச்சை நிறுத்திய நிலையில், தொண்டர்கள் தளபதி எனக் கடும் ஆரவாரம் செய்தனர்.

மாநாட்டில் 6 தீர்மானங்கள்

மதுரை பாரபத்தியில் நடைபெற்ற 2-ஆவது த.வெ.க. மாநில மாநாட்டில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன்விவரம்:

- சென்னை அருகேயுள்ள பரந்தூரில் விவசாய நிலங்களை அழித்து புதிய விமான நிலையம் கட்டும் முடிவை மத்திய, மாநில அரசுகள் கைவிட வேண்டும்.
- வாக்காளர் பட்டியல் பெயரில் சிறப்புத் தீவிரத் திருத்தம் என லட்சக்கணக்கானோரின் பெயர்கள் நீக்கப்பட்டு வருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. சுதந்திரமான, நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
- இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதையும், அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதையும் தடுக்கத் தவறி வரும் மத்திய, மாநில அரசுகளுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறோம். இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத் தீவை மீட்க வேண்டும்.
- ஆணவக் கொலைகளைத் தடுக்கத் தனிச் சட்டத்தைத் தமிழக அரசு இயற்ற வேண்டும்.
- தமிழகத்தில் பெண்கள், குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகிறது. சட்டம்-ஒழுங்கு அடியோடு சீர்குலைந்து இருப்பதற்கு நிர்வாகத் திறனற்ற திமுக அரசுதான் காரணம். ஆகவே, இந்த மாநாட்டின் மூலம் திமுக அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேர்மையான முறையில் தேர்வு நடத்தி அரசுத் துறைகளின் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.

பெருநிறுவன அலுவலகம் / தலைமை அலுவலகம்: GICHFL, நேஷனல் இன்சூரன்ஸ் பில்டிங், 6 ஆவது தளம், 14, ஜாம்ஷெட்ஜி டாடா சாலை, சர்ச்கேட், மும்பை-400020. தொலைபேசி: 022-43041900. மின்னஞ்சல்: corporate@gichf.com இணையத்தளம் : www.gichfindia.com
• தாம்பரம் கிளை : எண்.2C, சாலமன் தெரு, ஆதி நகர் கிழக்கு தாம்பரம், சென்னை - 600059
கிளை மின்னஞ்சல் முகவரி: tambaram@gichfindia.com அலுவலக தொலைபேசி எண்: 044-40056991 தொடர்பு விவரங்கள்: 9847224940
• போரூர் கிளை அலுவலகம்: எண் 163/215, 1ஆவது தளம், மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலை, அய்யப்பன்தாங்கல், சென்னை-600056.
அலுவலக தொ.பே.: 044-4957 1149, தொடர்பு விவரங்கள்: 9791113981, கிளை மின்னஞ்சல் முகவரி: porur@gichfindia.com

E-ஏல விற்பனை அறிவிப்பு

E-ஏல நாள்: 24.09.2025 / ஏலப்புள்ளிகளை சமர்ப்பிக்கக் கடைசி நாள்: 22.09.2025

இதன்படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இன்கீழ் GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட் (GICHFL).-இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும், பின்வரும் கடன்தாரர்கள் / அடமானதாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த கோரினார். எனினும், கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் அந்த நிலுவைத்தொகையை திருப்பி செலுத்த தவறியமையால், பின்வரும் சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14 மற்றும் இதன் தொடர்புடைய மேற்சொன்ன விதிகளில் விதி 8 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி நேரடி சுவாதீனம் எடுத்துள்ளார்.

வ. எண்.	கடன் கோப்பு எண் / கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / கிளை பெயர்	சொத்தின் முகவரி & சொத்தின் பரப்பு (கட்டுமானப் பரப்பு சதுர அடியில்)	கோரிக்கை அறிவிப்பு / அனுப்பப்பட்ட செய்தித்தாள் தேதி	நேரடி / அடையாள சுவாதீன தேதி	22.08.2025 நாள்படி மொத்த நிலுவைத்தொகை (POS, வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட)	குறைந்தபட்ச விலை (ரூபாயில்)
1.	TN0640600000471 (போரூர் கிளை) / G கவிதா (கடன்தாரர்) M.மகேந்திரன் (கூட்டுக்-கடன்தாரர்)	சர்வே எண் : 411/12A1C1A, மனை எண்.646, நெஸ்ட் விட்டல், ஃபிளாட் எண்.G-2, தரைத் தளம், ஸ்ரீ கணபதி நகர் காலனி, செம்மஞ்சேரி, சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை 600119. பிரிக்கப்படாத பங்கு: 213 சதுர அடி & மேல் கட்டுமானப் பரப்பளவு - 525 சதுர அடி (1 BHK)	13-06-2023 & 17-06-2023	03-07-2025 (நேரடி)	25,49,969/-	17,30,000/-
2.	TN0530100000019 (தாம்பரம் கிளை) / பிரகதீஸ்வரி M (கடன்தாரர்) J. மனோகரன் (கூட்டுக்-கடன்தாரர்)	மனை எண்.9, தரை & முதல் தளம், பகவத் சிங் நகர், 1வது தெரு, மாதவரம் கிராமம் & வட்டம், சென்னை - 600060 நிலப்பரப்பளவு - 1539 சதுர அடி. மேல் கட்டுமானப் பரப்பளவு - 2622 சதுர அடி (தரைத் தளம் + முதல் தளம் + ஹெட்ரூம்)	17-08-2016 & 24-09-2016	17-07-2025 (நேரடி)	1,44,11,945/-	1,07,15,825/-

E-ஏல நாள் மற்றும் நேரம்: 24.09.2025 அன்று (https://bankauctions.in) இணைய முகப்பில் பிற்பகல் 3:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை, தலா 5 நிமிடம் எண்ணிக்கை வரம்பற்ற காலநீட்டிப்புடன்.

டெண்டர் விலைப்புள்ளியை / மூடி முத்திரையிடப்பட்ட ஏலப்புள்ளியை உரிய விலைப்புள்ளிப் படிவத்தில் டேவணித்தொகை (EMD) மற்றும் வாடிக்கையாளர் விவரங்களுடன் (KYC) இணைய வழியிலோ மேற்குறிப்பிட்ட GICHF அலுவலகத்திலோ தாக்கல் செய்யக் கடைசி நாள்: 22.09.2025 அன்று மாலை 5.00 மணிக்குள்.

மேலும் மேற்கண்ட சொத்துக்களின் / உடைமைகளின் (SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் விதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான) E-ஏல விற்பனைக்கான இந்தப் பொது அறிவிப்பின் மூலம் குறிப்பிட்ட சொத்துக்களை **"உள்ளது உள்ள இடத்தில்"** மற்றும் **"உள்ளது உள்ளபடி"** எனும் முறையில் வாங்குவதற்கான விலைகோரல்கள் மூடி முத்திரையிட்ட உறைகளில் அல்லது இணைய வழியில் GICHFL நிறுவனத்தால் வரவேற்கப்படுகின்றன.

ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

1. E-ஏலமானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று எதுவும் வழங்கப்படமாட்டாது" எனும் அடிப்படைகளில் இணையவழியில் நடைபெறும். இந்த E-ஏலம் GICHF நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட E-ஏலச் சேவை வழங்குநரான "M/s. 4குளோசியூர்" நிறுவனத்தால் நடத்தப்படும்.
2. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தங்கள் பெயரை https://bankauctions.in எனும் இணைய முகப்பில் பதிவு செய்து கொண்டு தங்களுக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். கலந்து கொள்ள இருக்கும் ஏலதாரர்கள் E-ஏலத்துக்கான இணைய வழிப் பயிற்சியைப் பின்வரும் சேவை வழங்குநரிடம் பெறலாம்: M/s. 4குளோசியூர், #605 A, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட்டை, ஐதராபாத் - 500038, தெலுங்கானா. அலுவலக தரைவழிப்பேசி எண்: 040-23736405 மற்றும் உதவிக்குழு: 8142000062 / 66, திரு. பிரகாஷ் - 8142000064 / 8142000725, prakash@bankauctions.in, GICHFL தொடர்பு விவரங்கள்: 9847224940 (தாம்பரம்) & 9791113981 (போரூர்)
3. E-ஏல விற்பனையானது SARFAESI சட்டம் / விதிகள் 2002-இன் கீழான விதிமுறைகளுக்கும் கீழே / இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ஆர்வமுள்ள / கலந்து கொள்ளும் ஏலதாரர்களால் தாக்கல் செய்யப்பட உள்ள விலைகோரல் / ஏலப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டது.
4. இணைய வழி E-ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர் ஒவ்வொருவருக்கும் சொந்த மின்னஞ்சல் முகவரி இருக்க வேண்டியது கட்டாயமானது.
5. ஆர்வமுள்ள ஏலதாரர் ஒருவர் GICHF நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் முன்னிலையில் தகுதியுள்ள விலைப்புள்ளிதாரராக முறையாகப் பதிவு செய்யப்பட்டவுடன் அவர் ஆவணத்தைத் தாக்கல் செய்து இணைய முகப்பின் வழியே E-ஏலத்தில் கலந்து கொள்வதற்கான தனது ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும். E-ஏலச் சேவை வழங்குநரிடமிருந்து தனக்கான பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பெற வேண்டியது விலைப்புள்ளிதாரரின் / இணைய வழி ஏலதாரரின் தனிப்பட்ட பொறுப்புக்குரியது.
6. மேற்கண்ட சொத்துக்கள் மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச விலைக்குக் கீழே விற்பனை செய்யப்படமாட்டாது.
7. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச விலையில் 10% அளவுள்ள டேவணித்தொகையைக் (EMD) கேட்பு வரைவோலை / RTGS / NEFT மூலம் GIC HOUSING FINANCE LTD எனும் பெயருக்குச் செலுத்த வேண்டிய வங்கி விவரங்கள் பின்வருமாறு: வங்கியின் பெயர்: யூனியன் பாங்கு ஆப் இந்தியா, கணக்கு எண்: 005111010000039, கணக்கின் பெயர்: GIC HOUSING FINANCE LTD AUCTION A/C, கிளையின் பெயர்: LCB, ஃபோர்ட், முகவரி: UBI, 239 பேக்பே ரெக்லமேஷியோ நரிமன் பாயிண்ட், மும்பை, மகாராஷ்டிரா, அஞ்சல்குறியீடு 400021, IFSC எண்: UBIN0800511.
8. வெற்றி பெறும் ஏலதாரர்களைப் பொறுத்த வரையில் அவர்களது மேற்கூறிய வைப்புத்தொகைகள் பின்னர் கழித்துக் கொள்ளப்படும். மற்றவர்களுக்கு அவை திருப்பி அளிக்கப்படும். டேவணித்தொகைக்கு (EMD) வட்டி ஏதும் கிடையாது.
9. மேற்கூறிய டேவணித்தொகையுடன் (EMD) கூடிய விலைகோரல்களை இணைய வழியில் தாக்கல் செய்ய வேண்டிய இணைய முகப்பு: https://bankauctions.in/. இத்துடன் டேவணித்தொகையும் நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை மற்றும் முகவரிச் சான்று முதலான வாடிக்கையாளர் விவர ஆவணங்களின் (KYC) நகல்களும் இணைக்கப்பட்டுச் சேவை வழங்குநரிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது ஏலப் படிவம், டேவணித்தொகை மற்றும் வாடிக்கையாளர் விவர ஆவணங்கள் ஆகியவற்றை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட உரிய கிளை அலுவலகங்களுக்கு டேவணித்தொகை தாக்கல் செய்வதற்கான கடைசி நாளுக்கு முன்னர் வந்து சேருமாறு தாக்கல் செய்ய வேண்டும்.
10. விலைப்புள்ளிகள் திறக்கப்பட்ட பின் குறைந்தபட்ச விலைக்குக் குறையாமல் ஏலம் கோரியுள்ள ஆர்வமுள்ள ஏலதாரர்களுக்கு அதிகாரப்பூர்வ அலுவலரின் தனிப்பட்ட விருப்புரிமையின் பேரில் ஏலத்தொகையை உயர்த்திக் கோர வாய்ப்பு வழங்கப்படும்.
11. வெற்றி பெறும் ஏலதாரர்கள் ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை (EMD) போக, விற்பனை விலையில் 25% தொகையை விற்பனைக்கான அதிகாரப்பூர்வ அலுவலரால் விலைகோரல் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடனே செலுத்த வேண்டும். தவறினால் டேவணித்தொகை பறிமுதல் செய்யப்படும். விற்பனை விலையில் மீதமுள்ள 75% தொகையை அதிகாரப்பூர்வ அலுவலரின் விருப்புரிமையின் பேரில், விற்பனை உறுதி செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் செலுத்தலாம். இந்தக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மீதத் தொகையைச் செலுத்தத் தவறினால், ஏற்கெனவே செலுத்தப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் தொடர்பாக வெற்றி பெற்ற ஏலதாரருக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் அறிவிப்பு ஏதும் அனுப்ப வேண்டியதில்லை.
12. ஏலதாரர்கள் "கேவியட் எம்ப்ட"ருக்குக் (வாங்குவோர் எச்சரிக்கை) கட்டுப்பட்டவர்கள் என்பதால் கடனீட்டுச் சொத்து அல்லது நிறுவனத்தின் மீது வில்லங்கங்கள், சட்டப்படியான பொறுப்புக்கூறல்கள், சொத்து வரி - வருமான வரி - ஆயத் தீர்வை போன்ற நிலுவைகள், தொழிலாளர் நிலுவைகள், மின்சாரம் மற்றும் பராமரிப்பு நிலுவைகள் முதலானவை ஏதேனும் உண்டா என்பது குறித்துத் தாங்களே சொந்தமாக ஆழ்ந்து விசாரித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் விற்பனை விலை மட்டுமின்றி நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கக் கட்டணங்கள், மின் கட்டணங்கள், குடிநீர்க் கட்டணங்கள், முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணங்கள் (விதிக்கப்பட்டால்) முதலான அனைத்துச் செலவுகளும் சொத்துக்கள் தொடர்பான அனைத்துப் பிற இடைநிகழ் கட்டணங்கள், செலவினங்கள் முதலான அனைத்துச் செலவுகளும் வெற்றி பெற்ற ஏலதாரர்களையே சாரும்.
13. விற்பனைச் சான்றிதழுக்காகச் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம், முத்திரைத் தீர்வை, வரிகள் போன்ற கட்டணங்களும் வெற்றி பெற்ற ஏலதாரர்களின் பெயருக்குக் கடனீட்டுச் சொத்தை மாற்றுவதற்காக வேறு ஏதேனும் தீர்வைகள் செலுத்த வேண்டியிருந்தால் அவையும் வெற்றி பெற்ற ஏலதாரர்களையே சாரும்.
14. விற்பனைச் சான்றிதழானது மொத்த / விற்பனைத் தொகையும் வரப்பெற்ற பிறகு மட்டுமே, அதுவும் வெற்றி பெற்ற ஏலதாரரின் பெயரில் மட்டுமே வழங்கப்படும்.
15. இதன் மூலம் கடன்தாரர்கள், அடமானதாரர்கள், ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கு அறிவிப்பது யாதெனில், மேற்கூறிய சொத்துக்களை E-ஏல விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப வாங்க ஆர்வமுள்ள வாங்குநர்களை / கொள்முதலாளர்களை அவர்கள் அழைத்து வரலாம்.
16. மேற்கூறிய சொத்துக்களின் ஆய்வு, கோரிக்கையில் பேரிலும் அதிகாரப்பூர்வ அலுவலரின் வசதிக்கேற்பவும் நடைபெறும்.
17. அதிகாரப்பூர்வ அலுவலர் உச்சபட்ச விலைகோரலையோ வேறெந்த விலைகோரலையோ அனைத்து விலைகோரல்களில் எதையுமோ ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை. மேலும் எந்தக் காரணமும் தெரிவிக்காமல் எந்த விலைப்புள்ளியையும் அல்லது அனைத்து விலைப்புள்ளிகளையும் ஏற்கவும் தள்ளுபடி செய்யவும் அவருக்கு உரிமை உண்டு.
18. மேற்கூறிய சொத்துக்களின் மீது நிலுவையில் இருக்கக்கூடிய எந்தப் பொறுப்புக்கூறல் தொடர்பாகவும் GICHFL பொறுப்பேற்காது. சொத்துக்கள் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "மாற்று எதுவும் வழங்கப்படமாட்டாது" எனும் அடிப்படைகளிலேயே ஏலம் விடப்படும்.
19. கடன்தாரர்கள் / அடமானதாரர் விற்பனை உறுதிப்படுத்தப்படும் முன்பு GICHFL நிறுவனத்தை அணுகி ஒப்பந்தப்படியான நிலுவைத்தொகைகள் + செலவுகள் + விற்பனை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 15% வட்டி + விற்பனை விலையில் 5% (விற்பனை முடிந்துவிட்ட நிலையில் என்றால் வெற்றி பெறும் ஏலதாரருக்கு அளிக்கும் பொருட்டு) ஆகியவற்றைச் செலுத்துவதாகக் கூறி விற்பனையை ரத்துச் செய்யக் கோரினால் GICHFL அத்தொகைக்கு ஒப்புக்கொண்டு சுவாதீனத்தை அடமானதாரர் வசம் ஒப்படைக்கும்.
20. உச்சபட்ச ஏலதாரர் ஏல விலையில் 25% (ஏற்கெனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) தொகையை விற்பனை அறிவிப்பின் விதிமுறைகளுக்கேற்ப உடனடியாகச் செலுத்துவதோடு ஏல விலையின் எஞ்சியுள்ள 75% தொகையை 15 நாட்களுக்குள் அல்லது இரு தரப்பினருக்கு (அதிகாரப்பூர்வ அலுவலர் மற்றும் வெற்றி பெறும் ஏலதாரர்) இடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட காலநீட்டிப்புக்குள் செலுத்த வேண்டும். எப்படியானாலும் விற்பனை நாளிலிருந்து 30 நாட்கள் முடிந்த பின்னர் அதிகாரப்பூர்வ அலுவலரால் விற்பனைச் சான்றிதழ் வெளியிடப்பட்டு விற்பனை உறுதி செய்யப்பட வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் இந்த 30 நாட்கள் முடிவதற்கு முன்பாக விற்பனை உறுதிப்படுத்தப்பட மாட்டாது. முழுத் தொகையும் பெறப்பட்ட பின்னரே விற்பனை உறுதிப்படுத்தப்பட்டு விற்பனைச் சான்றிதழ் வெளியிடப்பெறும்.
21. குறைந்தபட்ச ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/-

SARFAESI சட்டம் 2002-இன் கீழான முறைப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பு

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றையும் சொத்துக்களின் முழு விவரத்தையும் அறிய அணுக வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட E-ஏலச் சேவை வழங்குநரான M/s. 4 குளோசியூர் நிறுவனத்தின் இணையத்தளம்: https://bankauctions.in.

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., சார்பில்
ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்

நாள்: 22.08.2025
இடம்: தாம்பரம் / போரூர்

RELIANCE Asset Reconstruction — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்.

பதிவு அலுவலகம்: 11ஆவது தளம், வடக்கு பக்கம், R-டெக் பார்க், மேற்கு விரைவுச்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை-400063.

சுவாதீன அறிவிப்பு [பார்க்க - விதி 8(1)] (அசையாச் சொத்துக்கானது)

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி லிட்., RARC 072 டிரஸ்ட் நிறுவனமானது 22.09.2022 நாளிட்ட ஒப்படைப்பு உடன்படிக்கையின்படி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து நிதிச் சொத்துக்களைத் திரட்டியுள்ளது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் **13.07.2024 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) 1. M/s சஞ்சய் எலக்ட்ரானிக்ஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் இதன் பங்குதாரர்: M. ரமேஷ் மற்றும் V. மகேஷ், எண் 1, ராஜராஜேஸ்வரி கோவில் வளாகம், நேரு காலனி பிரதான சாலை, நங்கநல்லூர், சென்னை-600 061. 2) திரு. M. ரமேஷ், எண் 33, காமராஜர் தெரு, B.V. நகர், பழவந்தாங்கல், சென்னை-600114, 3) திரு. V. மகேஷ், 15-12, ஔவையார் தெரு, நின்னக்கரை, மறைமலை நகர், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்-603209, 4) திரு. V. வெங்கடேசன், த/பெ. வேலாயுதம், 15-12, ஔவையார் தெரு, செங்கல்பட்டு தாலுகா, நின்னக்கரை, மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம் 603209, 5) திரு. R. கஜேந்திரன், எண் 34, மேட்டுத் தெரு, காந்தி நெடுஞ்சாலை, ஒரகடம், அம்பத்தூர், சென்னை-600053** ஆகியோருக்கு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மொத்தநிலுவை 09.07.2024 நாள்படி ரூ.62,54,029.52 (ரூபாய் அறுபத்திரண்டு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து இருபத்தொன்பது மற்றும் பைசா ஐம்பத்திரண்டு மட்டும்) தொகையை அவ்வறிவிப்பு நாளிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் அத்தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரருக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / அடமானதாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளுள் விதி 8-இன் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை **19.08.2025** அன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே கடன்தாரருக்கு / ஜாமீன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி லிட்-க்கு ரூ.70,91,400.05/- (ரூபாய் எழுபது இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து நானூறு மற்றும் பைசா ஐந்து மட்டும்)** தொகையை 18.08.2025 முதலான வட்டி, இதர கட்டணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடன்தாரரின் கவனத்துக்கு இதன் மூலம் தெரிவிக்க விரும்புவது யாதெனில், கடன்தாரர் "RARC"-இன் நிலுவைத்தொகைகளைச் சேர்ந்துள்ள அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்ய அல்லது பெயர் மாற்றத் தீர்மானிக்கப்படக்கூடிய நாளுக்கு முன்னர் எந்த நேரத்தில் செலுத்தி விட்டாலும் கடனீட்டுச் சொத்துக்களை "RARC" விற்பனை அல்லது பெயர் மாற்றம் செய்யாது என்பதோடு கடனீட்டுச் சொத்துக்களை விற்கவோ பெயர் மாற்றவோ மேற்கொண்டு எந்த நடவடிக்கையையும் "RARC" மேற்கொள்ளாது.

கடனீட்டுச் சொத்துக்களின் விவரம்

சொத்தின் உரிமையாளர்: திரு. R. கஜேந்திரன்
சென்னை – 600 053, அம்பத்தூர், ஒரகடம், காந்தி நகர், காந்தி பிரதான சாலை, மேட்டுத் தெருவைச் சேர்ந்த கதவு எண் 34 கொண்ட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். சர்வே எண் SO, பட்டாப்படி சர்வே எண் 50/1 பாகம், நகர சர்வே எண் 21, பிளாக் எண் 24, ஒரகடம் கிராமம், நிலத்தின் பரப்பளவு 2140 சதுர அடி, (கிரவுண்டு 2179 சதுர அடி). **எல்லைகள்: வடக்கு:** சாலை, **தெற்கு:** திரு. N. தேவராஜன் அவர்களுக்கு விற்கப்பட்ட மனை, **கிழக்கு:** காந்தி பிரதான சாலை, **மேற்கு:** திரு. கோபால் பிள்ளை மற்றும் பிறருடைய சொத்து.
இது அம்பத்தூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் வட சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இனம் எண் 2: சொத்தின் உரிமையாளர்: திரு. V.வெங்கடேசன் - அஞ்சல் குறியீடு – 603209, மறைமலை நகர், ஔவையார் தெருவைச் சேர்ந்த, பிளாக் எண் 15, NH-II (LIG-216), RBH கதவு எண் 12 கொண்ட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். சர்வே எண் 360 பாகம், நின்னக்கரை கிராமம், நிலத்தின் பரப்பளவு 1600 சதுர அடி மற்றும் அங்குள்ள கட்டடம் உட்பட. **எல்லைகள் பின்வருமாறு: வடக்கு:** பிளாக் எண் 15, கதவு எண் 13, **தெற்கு:** பிளாக் எண் 15, கதவு எண் 11, **கிழக்கு:** LIG பிளாட் எண் 15/15, **மேற்கு:** 40 அடிச் சாலை.
இது செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டங்களுக்கு உட்பட்டது.

இடம்: சென்னை
நாள்: 19.08.2025
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

RELIANCE Asset Reconstruction — ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்.

பதிவு அலுவலகம்: 11ஆவது தளம், வடக்கு பக்கம், R-டெக் பார்க், மேற்கு விரைவுச்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை-400063.

சுவாதீன அறிவிப்பு [பார்க்க - விதி 8(1)] (அசையாச் சொத்துக்கானது)

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி லிட்., RARC 072 டிரஸ்ட் நிறுவனமானது 22.09.2022 நாளிட்ட ஒப்படைப்பு உடன்படிக்கையின்படி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிடமிருந்து நிதிச் சொத்துக்களைத் திரட்டியுள்ளது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரானவர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் **05.05.2025 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) 1) M/s. RK இன்ஜினீரிங் வொர்க்ஸ், எண் 7/32, பள்ளித் தெரு, மணிமேடு, தண்டலம் அஞ்சல், சென்னை 600138. இன்னொரு முகவரி: 2/198, பாலகிருஷ்ணன் நகர், அரிபால் நகர் அருகில், பெரியபனிச்சேரி, சென்னை 600 122. 2. திரு S. ரகு (உரிமையாளர்), எண்7/32, பள்ளித் தெரு, மணிமேடு, தண்டலம் அஞ்சல், சென்னை, இன்னொரு முகவரி: 2/261 மகாத்மா காந்தி சியால், தனலட்சுமி நகர், மௌலிவாக்கம், சென்னை 600116. 3. திரு. B. உமாபதி (ஜாமீன்தாரர்), 6/108, காவேரி தெரு, ஜீவன் நகர், மௌலிவாக்கம், சென்னை 600116. 4. திரு B. ஜெயசங்கர் (ஜாமீன்தாரர்), 6/108, காவேரி தெரு, ஜீவன் நகர், மௌலிவாக்கம், சென்னை 600116. 5.திரு B சண்முகசுந்தரம் (ஜாமீன்தாரர்), 16/108, காவேரி தெரு-ஜீவன் நகர், மௌலிவாக்கம், சென்னை 600116. 6. திரு P தேவேந்திரன் (ஜாமீன்தாரர்), எண் 5 காளியம்மன் நகர், மாங்காடு, சென்னை 600056. 7. திருமதி D. கன்னியம்மாள் (ஜாமீன்தாரர்), எண் 5, காளியம்மன் நகர், மாங்காடு, சென்னை 600056** ஆகியோருக்கு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மொத்தநிலுவை 05.05.2025 நாள்படி **ரூ.1,09,67,919.99 (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து அறுபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பது மற்றும் பைசா தொண்ணூற்று ஒன்பது மட்டும்)** தொகையை அவ்வறிவிப்பு நாளிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் அத்தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரருக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / அடமானதாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளுள் விதி 8-இன் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை **19.08.2025** அன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே கடன்தாரருக்கு / ஜாமீன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்டிரக்ஷன் கம்பெனி லிட்-க்கு ரூ.1,13,25,608.07/- (ரூபாய் ஒரு கோடியே பதின்மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறுநூற்று எட்டு மற்றும் பைசா ஏழு மட்டும்)** தொகையை 18.08.2025 முதலான வட்டி, இதர கட்டணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடன்தாரரின் கவனத்துக்கு இதன் மூலம் தெரிவிக்க விரும்புவது யாதெனில், கடன்தாரர் "RARC"-இன் நிலுவைத்தொகைகளைச் சேர்ந்துள்ள அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்ய அல்லது பெயர் மாற்றத் தீர்மானிக்கப்படக்கூடிய நாளுக்கு முன்னர் எந்த நேரத்தில் செலுத்தி விட்டாலும் கடனீட்டுச் சொத்துக்களை "RARC" விற்பனை அல்லது பெயர் மாற்றம் செய்யாது என்பதோடு கடனீட்டுச் சொத்துக்களை விற்கவோ பெயர் மாற்றவோ மேற்கொண்டு எந்த நடவடிக்கையையும் "RARC" மேற்கொள்ளாது.

கடனீட்டுச் சொத்துக்களின் விவரம்

சொத்து 1: காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, மாங்காடு கிராமத்தில் எண் 68 இல் அமைந்துள்ள, ஸ்ரீ கல்லம்மன் நகர் விரிவு -1, பிளாட் எண் 5 கொண்ட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். சர்வே எண் 36/1A1, பட்டா எண் 145, பட்டாப்படி புதிய சர்வே எண் 36/1A1A, நிலத்தின் பரப்பளவு 1303 சதுர அடி. **எல்லைகள் பின்வருமாறு: வடக்கு:** காலி நிலம், **தெற்கு:** பிளாட் எண் 6, **கிழக்கு:** காலி நிலங்கள், **மேற்கு:** 24 அடிச் சாலை.
அளவீடுகள்: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 48 அடி 6 அங்குலம், தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக: 48 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக 27 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக: 27 அடி.
இது குன்றத்தூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

சொத்து 2: மௌலிவாக்கம் கிராமத்தில் உள்ள எண். 52 கொண்ட இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். சர்வே எண் 27/2, பிளாட் எண் 7, ஜீவன் நகர், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, நிலத்தின் பரப்பளவு 1400 சதுர அடி மற்றும் அங்குள்ள கட்டுமானப் பரப்பளவு 750 சதுர அடி உட்பட.
1200 சதுர அடி கொண்ட ஒரு மனைக்கான எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: திரு. B. உமாபதி அவர்களின் மனை மற்றும் 5 அடி வழி, **தெற்கு:** சர்வே எண் 29/1 இல் உள்ள காலி மனை, **கிழக்கு:** பிளாட் எண் 8 & பிளாட் எண் 9, **மேற்கு:** திரு. சண்முகம் அவர்களின் வழி மற்றும் மனை.
200 சதுர அடி கொண்ட ஒரு மனைக்கான எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: 20 அடி சாலை, **தெற்கு:** திரு. B. உமாபதி, திரு. B.ஜெயசங்கர் மற்றும் திரு B. சண்முகசுந்தரம் ஆகியோருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட மனை, **கிழக்கு:** திரு. B. உமாபதி அவர்களின் மனை, **மேற்கு:** திரு. சண்முகம் அவர்களின் மனை.
இது குன்றத்தூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

இடம்: சென்னை
நாள்: 19.08.2025
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

IndusInd Bank — இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்

FRR குரூப் இண்டஸ்இண்ட் வங்கி, எண் 25, ஸ்டீப்பிள் ரீச், A பிளாக், 3ஆவது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை-600086

Ref.எண்: IBL/FRR/SOUTH/Shri Krishna Agencies / 13(4) நாள்: 19.8.2025

1. **M/s கிருஷ்ணா ஏஜென்சிஸ்,** பிரதிநிதித்துவப்படுத்தும் இதன் உரிமையாளர்: எண் 5/5, கருங்குழி தெரு, பெரியகுப்பம் கிராமம், திருவள்ளூர், தமிழ்நாடு - 602001.
2. **திரு. விக்னேஷ்வரன் -** உரிமையாளர், எண் 5/5, கருங்குழி தெரு, பெரியகுப்பம் கிராமம், திருவள்ளூர், தமிழ்நாடு - 602001.
3. **திரு. சீதாராமன் -** ஜாமீன்தாரர், எண் 5/5, கருங்குழி தெரு, பெரியகுப்பம் கிராமம், திருவள்ளூர், தமிழ்நாடு - 602001.
4. **திருமதி. கமலவேணி,** ஜாமீன்தாரர், எண் 5/5, கருங்குழி தெரு, பெரியகுப்பம் கிராமம், திருவள்ளூர், தமிழ்நாடு - 602001.

1. கீழே கையொப்பமிட்டுள்ளவர், இண்டஸ்இண்ட் வங்கி லிட்.-இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (54/2002) (SARFAESI சட்டம்), பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் 01.06.2025 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர்: **M/s. திரு. கிருஷ்ணா ஏஜென்சிஸ், பிரதிநிதித்துவப்படுத்தும் இதன் உரிமையாளர் மற்றும் ஜாமீன்தாரர்கள்: திரு. விக்னேஷ்வரன், திரு. சீதாராமன், திருமதி கமலவேணி** ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள 30.04.2025 நாள்படி **ரூ.4065792.42 (ரூபாய் நாற்பது இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று இரண்டு மற்றும் பைசா நாற்பத்திரண்டு மட்டும்)** தொகையை வட்டி மற்றும் செலவினங்களுடன் சேர்த்து அவ்வறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். மேற்படி கோரிக்கை அறிவிப்புகள் விண்ணப்பதாரர்கள் மற்றும் அனைத்து கூட்டு விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கு முறையாக அனுப்பி வைத்து பெறப்பட்டது.

2. கடன்தாரர்கள் அத்தொகையினை செலுத்த தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன் கீழ் தனக்கு உள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 19.08.2025 அன்று அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே கடன்தாரருக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது இண்டஸ்இண்ட் வங்கி லிட்-க்கு 31.07.2025 நாள்படி **ரூ.4178706.42 (ரூபாய் நாற்பத்தொரு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூற்று ஆறு மற்றும் பைசா நாற்பத்திரண்டு மட்டும்)** தொகையை வட்டியுடன் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரர் இதன் மூலம் அழைக்கப்படுகிறார்.

அசையாச் சொத்தின் விவரம்

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, பெரியகுப்பம் கிராமம், பிளாக் எண் 27, வார்டு எண் D-இல் அமைந்துள்ள இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். சர்வே எண் 851/2 பாகம், TS எண் 2/17, கதவு எண் 5/5, கருங்குழி தெரு, பரப்பளவு ஏக்கர் 0.51/2 சென்ட் மற்றும் கட்டப்பட்டுள்ள கட்டடம் உட்பட. எல்லைகள் பின்வருமாறு: திருமதி பத்மாவதி அவர்களின் சொத்து மற்றும் 20 அடிச் சாலை ஆகியவற்றுக்கு வடக்கில், தெற்கு: புட்லூர் ஆற்றுக்கால், கிழக்கு: அன்வர் பைப் கம்பெனிக்குச் சொந்தமான சொத்து, மேற்கு: பத்மாவதி அவர்களின் சொத்து. அளவு: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் - 40.00 அடி, வடக்குத் தெற்காக இரண்டு பக்கமும் - 60.00 அடி.

இது திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

நாள்: **19.08.2025**
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்
இண்டஸ்இண்ட் வங்கி லிட்.

வரி விளம்பரம்

JOB OPPORTUNITIES

WANTED

ஆட்கள் தேவை

அலுவலக உதவியாளர் பணிக்கு பணியாளர் தேவை
- நிரந்தர பணியிடம் -
ஆதி திராவிடர் SCA பிரிவினர் கல்வி தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி விண்ணப்பிக்க கடைசி தேதி 29.08.2025 வெள்ளிக்கிழமை
முகவரி
The Secretary, KCSNHS School, No. 60, P.A.N.R. Salai, Washermenpet, Chennai - 21.
044-25951423
Email: kcsnhss1954@ yahoo.com

ஆட்கள் தேவை

காவலர் பணிக்கு பணியாளர் தேவை
- நிரந்தர பணியிடம் -
பொது பிரிவினர் கல்வி தகுதி 8ம் வகுப்பு Pass / Fail விண்ணப்பிக்க கடைசி தேதி 29.08.2025 வெள்ளிக்கிழமை
முகவரி
The Secretary, KCSNHS School, No. 60, P.A.N.R. Salai, Washermenpet, Chennai - 21.
044-25951423
Email: kcsnhss1954@ yahoo.com

PUBLIC NOTICE

CHANGE OF NAME

பெயர் மாற்றம்

V. இராமதாஸ் அவர்களின் மகளான செல்வி R. வேலாயுத கனி (இந்து) அக்டோபர் 12, 1980 சென்னையில் பிறந்தார். எண்.6/5, கங்கை அம்மன் கோவில் தெரு, கள்ளிகுப்பம், அம்பத்தூர், சென்னை 600053 என்ற முகவரியில் வசித்து வருகிறார். அக்டோபர் 12, 1998 இல் இருந்து இவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதால் தனது பெயரை இரா.வேத கனி என்று மாற்றியுள்ளார்.
இரா.வேலாயுத கனி

NAME CHANGE

I, Ramani Satyanarayana, Son of Thiru Satyanarayana, born on 31st May 1966 (District of birth: Chennai), residing at No.26B, Ganna Sambanthar North Street, Rajapalayam, Virudhunagar-626117 shall henceforth be known as Ramani Sathyanarayana
Ramani Satyanarayana

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!